# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

ஆண்டு: 7 திகதி: 22/06/2019

நேரம்: 2½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. ச பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | புள்ளிகள் |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| | |
| மொத்தப் புள்ளிகள் | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

பழங்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த புலவர்களில் ஒருவர் வன்பரணர். அவர் குடும்பம் மிகவும் பெரியது. மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் எனப் பலரைப் பேணிக்காக்க வேண்டிய பொறுப்பு இருந்ததால் அவர் மிகவும் வறுமையில் வாடினார்.

வள்ளல்களிடம் சென்று உதவி பெற எண்ணிப் புலவரும் அவருடைய சுற்றத்தாரும் ஒரு நாள் காட்டினூடே நடந்து சென்றனர். வெகுதூரம் கால் கடுக்க நடந்ததால் அவர்கள் களைப்புற்றனர். அதனால் சிறிது நேரம் களைப்பாற வேண்டி அவர்கள் ஒரு மர நிழலில் தங்கினர்.

அப்போது வேடன் ஒருவன் அவ்வழியே வந்தான். அவனுடைய காலில் இரத்தம் படிந்திருந்தது. அவன் அம்பையும் வில்லையும் தன் கரங்களில் ஏந்தியிருந்தான். அவனுடைய மார்பில் அழகிய முத்துமாலை ஒளிவிட்டது. வேட்டையில் கொன்ற மானின் சதையை அவன்தன் தோளில் சுமந்திருந்தான். வேடனின் எடுப்பான தோற்றம் வன்பரணர் உள்ளத்தில் அவன் சிறந்த கொடைத்தன்மை வாய்ந்தவன் என்ற எண்ணத்தை எழுப்பிற்று. புலவர் எழ முயன்றார். ஆனால் களைப்புற்ற அவர் கால்கள் தள்ளாடின.

புலவரின் நிலையினை உணர்ந்த வேடன், “நீங்கள் மிகவும் சோர்ந்திருக்கிறீர்கள். அமருங்கள். பசி தீரச் சற்று நேரத்தில் உணவு தருகிறேன்” என்றான். சுற்றுமுற்றும் அவன் கண்கள் வட்டமிட்டன. அவன் தன்னுடன் வேட்டையாட வந்தவர் எவரும் இன்னும் திரும்பவில்லை என்பதை அறிந்தான். அவன் விரைவில் சுள்ளிகளைச் சேர்த்துத் தீ மூட்டினான்; தான் கொண்டு வந்த மான் இறைச்சியை அத்தீயில் பக்குவமாக வாட்டினான். அவன் அதனைப் புலவருக்கும் உடனிருந்த சுற்றத்தாருக்கும் அளித்தான். தான் அணிந்திருந்த விலையுயர்ந்த முத்துமாலையைக் கழற்றிப் புலவர் கையில் கொடுத்துவிட்டு அவன் அகன்றான். சற்று நேரத்தில் அவனைத் தேடிக்கொண்டு வீரர்கள் வந்தனர். தான் காண வந்த வள்ளல் அவன்தான் என்பதைப் புலவர் அவர்களிடமிருந்து அறிந்து கொண்டார்.

1. வன்பரணர் ஏன் வறுமையில் வாடினார்?

2. புலவர் தம் வறுமையை எவ்வாறு போக்கிக் கொள்ள விரும்பினார்?

3. வேடனின் தோற்றம் புலவரின் உள்ளத்தில் எத்தகைய உணர்வைத் தோற்றுவித்தது?

4. புலவரின் பசியைப் போக்க வேடன் என்ன செய்தான்?

5. தான் தேடி வந்த வள்ளல் வேடன்தான் என்பதைப் புலவர் எப்போது அறிந்தார்?

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

1. திருமணம்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. உணவு

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. காலநிலை

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4. குடும்பம்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

5. பரம்பரை

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

6. நண்பர்கள்

7. அப்துல்கலாம்

8. தண்ணீர்

9. பூக்கள்

10. செம்மொழி

BLANK PAGE

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

1. அம்மா சமையல் செய்தார்.
   அப்போது அப்பா புல் வெட்டினார்.

   ______________________________

   ______________________________

2. வாணி கதைப்புத்தகம் படித்தாள்.
   அப்போது கண்ணன் தொலைக்காட்சி பார்த்தான்.

   ______________________________

   ______________________________

3. சீதா ஓர் அழகான ஓவியத்தை வரைந்தாள்.
   அவள் அதை வீட்டுச் சுவரில் தொங்கவிட்டாள்.

   ______________________________

   ______________________________

4. கலா கடைக்குச் சென்றாள்.
   அவள் ஒரு புத்தகத்தை வாங்கினார்.

   ______________________________

   ______________________________

5. கண்ணன் நூலகத்திற்குச் சென்றான்.
   அவன் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினான்.

   ______________________________

   ______________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 30 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. எனக்குப்பிடித்த விளையாட்டு
2. என் மனங்கவர்ந்த ஓர் ஆசிரியர்
3. நான் தமிழ்க் கல்வி நிலையத்தின் தலைவரானால் . . . . . .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **10** |

**பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

1. அண்மையில் அரங்கேற்றம் செய்த உமது சினேகிதன் அல்லது சினேகிதியைப் பாராட்டி அவருக்கு ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுக.
2. உமது சினேகிதன் அல்லது சினேகிதி கேட்டுக் கொண்டதன்படி ஒரு தமிழ் உணவு பற்றியும் அதை எந்த அளவுகளில் எவ்வாறு சமைப்பது என்பது பற்றியும் விபரமாகக் கடிதம் எழுதுக.